**F.Y.**
**March 2017**

**Reg. No. ......................................**

**Name ..........................................**

**608**

# Part - II

# TAMIL

Maximum : 80 Scores

Time : **2½** Hours

Cool off time : **15** Minutes

***General Instructions to Candidates :***

- There is a 'Cool off time' of 15 minutes in addition to the writing time of 2½ hrs.
- You are neither allowed to write your answers nor to discuss anything with others during the 'cool off time'.
- Use the 'cool off time' to get familiar with questions and to plan your answers.
- Read questions carefully before answering.
- All questions are compulsory and only internal choice is allowed.
- When you select a question, all the sub questions must be answered from the same question itself.

பொதுவழிமுறைகள் :-

- விடை எழுத தந்துள்ள 2½ மணிகளுக்கு மேலாக தொடக்கத்தில் 15 நிமிடங்கள் ஓய்வு நேரமாக (cool off time) தரப்பட்டுள்ளது. இந்நேரத்தில் விடை எழுதவோ விவாதிக்கவோ கூடாது.
- இந்நேரத்தில் வினாக்களைப் படித்துப்புரிந்து கொள்ளவும் விடையை திட்டமிடவும் பயன்படுத்த வேண்டும்.
- விடை எழுதும் முன்பு வினாக்களை கவனமாக படிக்கவும்
- எல்லா வினாக்களுக்கும் விடை எழுத வேண்டும்.
- சில வினாக்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைப் பயன்படுத்தி விடை எழுதுக.
- வினாக்களை தேர்வு செய்வு செய்யும்போது, உட்பிரிவின் வினாக்களின் விடைகளை அதன் கீழ் தரவேண்டும்

**(1 முதல் 10 வரையுள்ள வினாக்களுக்குரிய விடைகளைத் தேர்ந்தெடுத்து எழுதுக.)** **10 × 1 = 10**

**1.** ‘அறிவு’ எனப்படுவது --------------- சொல் நோன்றல்

(அ) பெதும்பையார் (ஆ) மங்கையார்

(இ) பேதையார் (ஈ) மடந்தையார்

**2.** நவீனத்துவத்தின் தலைமையான பிரதிநிதி

(அ) கி. ராஜநாராயணன் (ஆ) புதுமைப்பித்தன்

(இ) சிற்பி (ஈ) நகுலன்

**3.** ‘தாயின் அருகில் அமர்ந்திருக்கும் சேய்’ இத்தொடரில் ‘சேய்’ என்பது

(அ) இந்தியா (ஆ) வங்காளதேசம்

(இ) பாகிஸ்தான் (ஈ) இலங்கை

**4.** ‘புகழ் எனின் உயிரும் கொடுக்குவர் - பழிஎனின்
--------------- டன் பெறினும் கொள்ளலர்’

(அ) பொருள் (ஆ) ஆபரணம்

(இ) உலகு (ஈ) உணவு

**5.** ‘கார் அறுத்தான்’ என்னும் சொல் ஆகுபெயருள் எவ்வகையைச் சாரும்

(அ) இடவாகுபெயர் (ஆ) காலவாகுபெயர்

(இ) பண்பாகுபெயர் (ஈ) சினையாகுபெயர்

6. இயற்கைக்கும் மனிதனுக்கும் உள்ள உறவை வலுப்படுத்துவது ---------- நடன வழிபாடு

(அ) தெருக்கூத்து (ஆ) தெய்யம்

(இ) பாவைக்கூத்து (ஈ) படையணி

7. தலித் என்ற சொல் தல் என்ற ---------- மொழிச் சொல்லில் இருந்து வந்ததாகக் கூறப்படுகிறது

(அ) எபிரேயம் (ஆ) கிரேக்கம்

(இ) வங்காளம் (ஈ) சமஸ்கிருதம்

8. உலகம் சுற்றும் தமிழன் என்னும் நூலின் ஆசிரியர்

(அ) அசோகமித்திரன் (ஆ) புதுமைப்பித்தன்

(இ) ஏ. கே. செட்டியார் (ஈ) சி.வை. தாமோதரம்பிள்ளை

9. மணியழகு என்பது --------------- என பிரியும்

(அ) மணி + அழகு (ஆ) மணி + யழகு

(இ) மணி + வழகு (ஈ) மணி + கழகு

10. திருவையாற்றின் காட்சியைப் பாடிய சைவசமயக் குரவர்

(அ) திருநாவுக்கரசர் (ஆ) சுந்தரர்

(இ) திருஞானசம்பந்தர் (ஈ) மாணிக்கவாசகர்

**(11 முதல் 14 வரையுள்ளவற்றைச் சரியாகப் பொருத்துக.)** **4 × 1 = 4**

| | | | |
|---|---|---|---|
| **11.** | சொல்லாக் கதை | - | பரிதிமாற்கலைஞர் |
| **12.** | இந்திரவிழா | - | ஆ. மாதவன் |
| **13.** | நாடகவியல் | - | மணிமேகலை |
| **14.** | கிருஷ்ணப் பருந்து | - | தமிழச்சி |

**(15 முதல் 18 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மூன்று கருத்துகள் அமையும்படி விடை எழுதுக.)** **4 × 3 = 12**

**15.** தமிழிலக்கியத்தில் காணலாகும் அவலச் சுவையை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

**16.** கண்டல்காடுகள் என்றால் என்ன? அதன் பயன்கள் யாவை?

**17.** ‘பண்பாட்டின் பிரதிபலிப்பே இலக்கியம்’ இக்கருத்தினை ஆராய்க.

**18.** வெள்ளையன் மீண்டும் தன் சொந்த மண்ணிற்குத் திரும்பி வரக்காரணம் யாது? உங்கள் கருத்துகளைத் தருக.

**(19 முதல் 23 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் நான்கு கருத்துகள் அமையும்படி விடை எழுதுக.)** **5 × 4 = 20**

**19.** ‘பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல காலவகையினானே’ என்னும் நன்னூல் நூற்பாக் கருத்தை நவீனத்துவத்தின் அடிப்படையில் நிறுவுக.

**20.** மருமக்கள் வழி மான்மியம் பாடப்பகுதியில் காணலாகும் அவலங்களைத் தொகுத்துரைக்க.

**21.** பொருத்துக:

ஆடு - வன்தொடர்க்குற்றியலுகரம்

பந்து - இடைத்தொடர்க்குற்றியலுகரம்

எட்டு - நெடில்தொடர்க்குற்றியலுகரம்

மார்பு - மென்தொடர்க்குற்றியலுகரம்

**22.** 'மனிதர்கள் தமக்குத் தாமே ஏற்படுத்திக் கொண்ட கேடுதான் நீலகிரியில் ஏற்பட்ட சோகம்' - என்பதற்கான காரணங்களை வலியுறுத்துக.

**23.** நீவிர் சென்றுவந்த ஏதேனும் பயண அனுபவத்தை நாட்குறிப்பாக எழுதக.

**(24, 25 வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் ஐந்து கருத்துகள் அமையும்படி விடை எழுதுக.)** **2 × 5 = 10**

**24.** "துண்டொன்றைக்
கட்டிக்கொண்டு
அம்மாவாக முடிகிறது
குழந்தைகளால்.
குழந்தையாக முடியாமல்
அல்லற்பட்டுக் கொண்டிருப்பது
அம்மாக்கள் தான்"

- விமர்சனம் செய்க.

**25.** ‘மனிதர்கள் இல்லாத உலகத்தில் விலங்குகளும் பறவைகளும் வாழமுடியும். ஆனால் மனிதரால் வாழமுடியுமா விலங்குகளும் பறவைகளும் இல்லாத உலகத்தில்’ - இக்கருத்தினை ஆராய்க.

**(26 முதல் 28 வரையிலான வினாக்களுக்கு இரண்டு பக்கங்களுக்குக் குறையாமல் கட்டுரை வடிவில் விடை தருக.)** **3 × 8 = 24**

**26.** கேரள - தமிழகக் கலைகளை ஒப்பிட்டு கேரளத் தமிழ் இதழில் வெளியிடுவதற்கான ஒரு கட்டுரை வரைக.

***(அல்லது)***

உனது ஊரில் நடைபெற்ற திருவிழா நிகழ்ச்சியினை நேர்முக வர்ணனையாக எழுதுக.

**27.** சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு மாநாட்டின் சார்பாக நடைபெறும் கருத்தரங்கில் உரையாற்ற ‘ இயற்கை நலனே! மனித நலன்! ’ என்னும் தலைப்பில் கருத்தரங்கக் கட்டுரை தயார் செய்க.

***(அல்லது)***

இயற்கைச் சீரழிவைச் சுட்டிக்காட்டி ‘இயற்கையின் கண்ணீர்’ என்னும் தலைப்பில் பத்திரிக்கைத் தலையங்கம் ஒன்று எழுதுக.

28. ‘நகைச்சுவைகள் வாழ்வில் இன்பம் பயக்கின்றன! பயக்கவில்லை!’ என்னும் தலைப்பில் நடைபெறவிருக்கும் பட்டிமன்றத்தில் ஏதேனும் ஓர் அணியில் பேசுவதற்கான கருத்துக்களைத் தொகுக்கவும்.

***(அல்லது)***

தமிழ் இலக்கிய மன்ற விழாவில் உரையாற்றுவதற்காக ‘சி. வை. தாமோதரம் பிள்ளையின் தமிழ்ப்பணி’ என்னும் தலைப்பில் சொற்பொழிவுக் கட்டுரை ஒன்று எழுதுக.